**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 217/2021**
**வழக்கு சாட்சி PW-12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயராமன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ராமசாமி | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | செங்கோட்டை | வயது | : | 43 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 26.02.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது செங்கோட்டை காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு ஆய்க்குடி காவல்நிலையத்தில் காவலராக பணிபுரிந்தபோது, அச்சன்புதூர் காவல்நிலையத்தில் ஆய்வாளருக்கு தனிஅலுவலராக பணிபுரிந்தேன். கடந்த 04.08.2017ம் தேதி, காலை 06.30 மணிக்கு கள்ளத்துப்பாக்கி நடமாட்டம் சம்பந்தமாக தனி அலுவலாக நானும், காவல் ஆய்வாளர் மீனாட்சிநாதன், பயிற்சி உதவி ஆய்வாளர் ஆண்டலின் ரமேஷ், தலைமைக்காவலர் கமலக்கண்ணன், காவலர்கள் பத்மராஜா, பழனிவேல்ராஜன் ஆகியோர் அச்சன்புதூர் – காசிதர்மம் செல்லும் சாலையில் செவக்காடு விலக்கிற்கு அருகில் ரோந்து செய்து கொண்டிருக்கும் போது, செவக்காடு ரோட்டின் மேற்கிலிருந்து கிழக்காக TN-67-Z-6828 என்ற எண் கொண்ட வெள்ளை நிற ஆம்னி கார் வருவதை நிறுத்தும் போது, பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட எதிரிகள் ஆழ்வார், காளிமுத்து, குமாரசாமி, பீர்முகமது

ஆகியோர்கள் வாகனத்தில் துப்பாக்கியுடன் வந்தவர்களை மடக்கி விசாரித்தபோது, எதிரி ஆழ்வார் ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தார்.

ஆழ்வார் வசம் இருந்த ஒரு ஒற்றைக்குழல் துப்பாக்கி மற்றும் 5 தோட்டாக்கள் ஆகியவற்றை காலை 08.00 மணிக்கு அத்தாட்சி பிறப்பித்து ஆய்வாளர் கைப்பற்றினார். எதிரி காளிமுத்துவிடமிருந்து ஒரு ஒற்றைக்குழல் துப்பாக்கி மற்றும் 5 தோட்டாக்கள் ஆகியவற்றை காலை 08.30 மணிக்கு அத்தாட்சி பிறப்பித்து ஆய்வாளர் கைப்பற்றினார். எதிரி குமாரசாமியிடம் ஒரு ஒற்றைக்குழல் மசில்லோடு துப்பாக்கி, சிறிது கரிமருந்தையும் மற்றும் சிறிது ஈயரவைகள் ஆகியவற்றை காலை 09.00 மணிக்கு அத்தாட்சி பிறப்பித்து ஆய்வாளர் கைப்பற்றினார். எதிரி பீர்முகமதுவிமிருந்து காலை 09.30 மணிக்கு 0.22 துப்பாக்கியும், துப்பாக்கி தோட்டாக்கள் 3 ம், ஒரு காலி தோட்டா ஆகியவற்றை அத்தாட்சி பிறப்பித்து ஆய்வாளர் கைப்பற்றினார்.

காலை 10.00 மணிக்கு அவர்கள் வந்த TN-67-Z-6828 என்ற எண் கொண்ட வெள்ளை நிற ஆம்னி காரையும் சோதனை செய்து, அதிலிருந்து மசூல்லோடு துப்பாக்கி ஒன்று, ஏர்கன் -2, ஒற்றைக்குழல் துப்பாக்கி தோட்டாக்கள் - 8, கத்தி - 2, நெற்றி டார்ச் லைட் - 2, கருப்பு நிற பேட்டரி- ஆகியவற்றை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்கள் சகிதம் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1 முதல் 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

அத்தாட்சிகளில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சம்பவயிடத்தில், சம்பவ நேரத்தில் இருந்ததை காட்டும் ஆவணம் பாக்கெட் டைரி என்றால் சரிதான். நான் பாக்கெட் டைரியை

ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை. நான் சொன்ன நாள், சொன்னநேரத்தில் சம்பவயிடத்தில் இருக்கவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(1 முதல் 5 எதிரிகளின் குறுக்கு விசாரணையானது, மற்ற எதிரிகளின் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. )

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.27 15:43:04 +0530